# யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் - இலங்கை
# முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2010/2011 (வெளிவாரி)

**Bachelor of Business Management (Online) Degree Programme – 2010/2011**

**விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**

1. பெயரை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் ஒரு எழுத்து அமையுமாறு தெளிவாக எழுதவும். ஆங்கிலத்தில் பெரிய (capital) எழுத்துக்களில் எழுதவும்.

2. முகவரியைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தெளிவாக எழுதவும்..

3. தற்போது வசிக்கும் நகரத்தின் பெயரையும், நாட்டின் பெயரையும் குறிப்பிடவும்.

4. தற்போது தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும். வேறு தொலைபேசி இலக்கங்கள் இருப்பின் உதாரணமாக, அலுவலக தொலைபேசி அல்லது கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் இருப்பின் அவற்றை (4)இல் ஏனைய தொலைபேசி இலக்கம் என்னும் கூட்டில் குறிப்பிடவும்.

5. தற்போது தொடர்பிலுள்ள மின்னஞ்சல் முகவரியைத் தெளிவாகத் தரவும். மின்னஞ்சல் முகவரி இல்லாதவர்கள் மின்னஞ்சல் முகவரியை ஆரம்பிக்கவும்.

6. தற்போது பிறநாட்டில் வசிப்பவர்களாயின், அந்நாட்டின் பெயரைக்குறிப்பிடவும்.

7. தற்போது தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்களைக் கேட்கப்பட்ட பெட்டியினுள் தெளிவாகக் குறிப்பிடவும்.

8. விண்ணப்பதாரி க.பொ.த. (உ.த) ஆகக்குறைந்த தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்படும் சமமான தகைமை BBM கற்கைநெறி சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடத்தினாலும், மூதவையினாலும் அங்கீகாரமளிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

9. க.பொ.த.(உ.த) மேலதிகமான தகைமை∴தகைமைகள் யாவும் குறிப்பிடப்படல் வேண்டும்.

10. தற்போது ஏதாவது பயிற்சிநெறி தொடர்பிலோ அல்லது வேறேதாவது காரணங்களிற்காகவோ ஏதாவது ஒரு நிறுவனத்தில் அல்லது சபையில் உள்வாரியாகவோ அல்லது வெளிவாரியாகவோ பதிவு செய்திருப்பின் அது தொடர்பான விபரங்கள் (12)இல் தெளிவாகத் தரப்படல் வேண்டும்.

11. கணினி தொடர்பில் பெற்ற சான்றிதழ் அல்லது அனுபவத்தை (13)இல் விபரமாகக் கொடுத்தல் வேண்டும்.

12. இக்கற்கை நெறியைத் தெரிவு செய்தமைக்கான காரணத்தை ∴ காரணங்களை சுருக்கமாகக் கூறுக.

13. விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 250 செலுத்தப்படல் வேண்டும். யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 162 – 090503 - 7 என்னும் கணக்கு இலக்கத்தில் பணத்தைச்செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி அலகில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும எமது இணையத்தளத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் www.jfn.ac.lk என்ற

முகவரியில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று மேற்குறிப்பிடப்பட்டவாறு ரூபா 250 வங்கியாணையை இணைத்து அனுப்பி வைக்கலாம்.
அவற்றின் இலக்கம் விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இணையத்தளத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்வோர் பணம்செலுத்தப்படுவதற்கான உறுதிச்சிட்டையையும் பெற்றுக்கொள்ள முடியும். இதில் முதலாவது பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி விண்ணப்பதாரருக்குரியது மூன்றாவது, நான்காவது பிரதி வங்கிக்கு செலுத்தப்படல் வேண்டும். .

14. இப்படிவம் விண்ணப்பதாரியைப் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவமேயொழிய பதிவினை மேற்கொள்வதற்கான படிவம் அல்ல என்பதனையும், விண்ணப்பதாரி பரீட்சைக்கு சமூகமளித்து அதன்மூலம் பெற்ற புள்ளிகளைக்கொண்டு மட்டுமே தெரிவு செய்யப்படுவர் என்பதனையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

15. விண்ணப்பதாரி பரீட்சை எடுக்க விரும்பும் பரீட்சைநிலையத்தை குறிப்பிடல் வேண்டும். இல. (17) இல் பொருத்தமானதைத் தெரிவு செய்யவும். விண்ணப்பதாரி தமது வதிவிடத்திற்கு அருகில் உள்ள பரீட்சைநிலையத்தைத் தெரிவு செய்யலாம். விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சைநிலையம் பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும்.

16. விண்ணப்பப்படிவத்துடன் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட ஒரு தபாலுறையை அனுப்புவதன் மூலம் தமது விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமைக்கான உறுதிச்சான்றை விண்ணப்பதாரி பெற்றுக்கொள்ள முடியும்.

17. சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அல்லது தகுதியற்ற விண்ணப்பங்கள் அல்லது முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

18. விண்ணப்பப்படிவங்கள் யாவும் பதிவாளர், வெளிவாரிப்பட்டப் படிப்பு பரீட்சைகள், பதிவுகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு முடிவுத்திகதியலன்றோ அல்லது முடிவுத்திகதிக்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் பக்கத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு எனக்குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்பு பரீட்சைகள், பதிவுகள் அலகு அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும்.